**டிசம்பர் – 26**

# TNPSC துளிகள்

- கிழக்கு வங்காள FC அணி, நேபாள அணியை வீழ்த்தி, 2025 ஆம் ஆண்டிற்கான முதல் SAFF மகளிர் கிளப் சாம்பியன்ஷிப் போட்டியில் வென்றதுடன், இந்தியாவின் முதல் சர்வதேச மகளிர் கிளப் பட்டத்தை வென்றது.
- மலையாளப் பதிப்பகமான DC புக்ஸ் நிறுவனத்தின் வெளியீட்டாளரும் நிர்வாக இயக்குநருமான ரவி டீசீக்கு பிரான்சு நாட்டின் கௌரவ விருதான Chevalier de l'Ordre des Arts et des Lettres (Knight of the Order of Arts and Letters) வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான NDTV இந்தியன் ஆஃப் தி இயர் விருதை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (BCCI) முன்னாள் செயலாளர் ஜெய் ஷா பெற்றுள்ளார்.
- பிரேசிலில் நடைபெற்ற 4வது BRICS ஷெர்பாக்கள் சந்திப்பின் போது, BRICS நாடுகளின் தலைமைப் பொறுப்பை பிரேசில் இந்தியாவிடம் ஒப்படைத்ததுடன், 2026 ஆம் ஆண்டில் BRICS அமைப்பினை இந்தியா வழிநடத்த உள்ளது.
- மூத்த மலையாள நடிகர், எழுத்தாளர் மற்றும் இயக்குனர் ஸ்ரீனிவாசன் அவரது 69வது வயதில் காலமானார்.
- 1941 ஆம் ஆண்டு பியர்ல் துறைமுகத்தில் நடைபெற்ற ஜப்பானியக் குண்டுவெடிப்பில் இருந்து உயிர் தப்பியவர்களில் (குறைந்து வரும் எண்ணிக்கையில்) ஒருவரான இரண்டாம் உலகப் போரின் கடற்படை வீரர் இரா "ஐக்" ஷாப் சமீபத்தில் காலமானார்.
- புது டெல்லியில் நடைபெற்ற இரண்டாவது உலக சுகாதார அமைப்பின் (WHO) பாரம்பரிய மருத்துவம் குறித்த உலகளாவிய உச்சி மாநாட்டில் அஸ்வகந்தா குறித்த நினைவு அஞ்சல் முத்திரையை இந்தியப் பிரதமர் வெளியிட்டார்.
    - அஸ்வகந்தா (அமுக்கரா கிழங்கு) என்பது ஆயுர்வேதத்தில் பயன்படுத்தப்படும் விதானியா சோம்னிஃபெரா அறிவியல் பெயர் கொண்ட ஒரு மருத்துவ தாவரம் ஆகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## விக்டோரியா மண்டபத்தின் புதுப்பித்தல் பணிகள்



- சென்னையில் உள்ள விக்டோரியா மகாராணி பெயரிடப்பட்ட புணரமைக்கப்பட்ட

விக்டோரியா பொது மண்டபத்தைத் தமிழக முதல்வர் திறந்து வைத்தார்.

- இது 1888 ஆம் ஆண்டில் இந்திய-சாராசனிக் கட்டிடக்கலை பாணியில் கட்டப்பட்டது.
- விக்டோரியா பொது மண்டபம் ஆனது புகழ்பெற்ற கட்டிடக் கலைஞர் இராபர்ட் சிஷோல்ம் என்பவரால் வடிவமைக்கப்பட்டு நம்பெருமாள் செட்டி என்பவரால் கட்டப் பட்டு, கன்னிமரா பிரபுவால் பொதுமக்களின் பார்வைக்குத் திறக்கப் பட்டது.
- இந்த மண்டபம், 1916 ஆம் ஆண்டில் மாநிலத்தில் திராவிட அரசியலுக்கு வழி வகுத்த நீதிக்கட்சி உருவாக்கப்பட்ட இடமாகவும் இருந்தது.
- சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட, துத்தரி, குழல், கின்னாரம், கொக்கரை மற்றும் இதர சிலவற்றை உள்ளடக்கிய சுமார் 120 இசைக்கருவிகளும் இங்கு காட்சிப் படுத்தப் பட்டன.
- இந்தப் பணிகள் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

# தேசியச் செய்திகள்

## VB–G RAM G மசோதா





- இந்தியக் குடியரசுத் தலைவர், 2025 ஆம் ஆண்டு விக்சித் பாரத்–ரோஜ்கர் மற்றும் அஜீவிகா திட்டம் (கிராமின்) (VB–G RAM G) மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார்.
- இந்தச் சட்டம் 2005 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதிச் சட்டத்திற்கு (MGNREGA) மாற்றாக அமைகிறது.
- இந்தச் சட்டத்தின் கீழ், அரசாங்கம் ஆனது பணிகளுக்கான கவனம் செலுத்தக் கூடிய நான்கு பகுதிகளைப் பட்டியலிட்டுள்ளது.
- இந்தக் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள் ஆனது நீர்ப் பாதுகாப்பு மற்றும் நீர் தொடர்பான பணிகள், முக்கியக் கிராமப்புற உள்கட்டமைப்பு மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான உள்கட்டமைப்பு ஆகியவனவாகும்.
- இந்தச் சட்டத்தின் கீழ் கவனம் செலுத்த வேண்டிய நான்காவது பகுதி தீவிர வானிலை நிகழ்வுகளைத் தணிக்கும் பணிகள் ஆகும்.
- இந்தச் சட்டத்தின் கீழ் ஊதிய வேலைவாய்ப்பு ஆனது கிராமப்புறங்களில் நிலையான பொதுச் சொத்துக்களை உருவாக்குவதோடு இணைக்கப்பட்டுள்ளது.


## இந்தியாவில் நுகர்வோர் நீதியில் தாமதம்

- 2024 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி நிலவரப்படி, மொத்தம் 5.43 லட்சம் நுகர்வோர் புகார்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய நுகர்வோர் ஆணையங்களுக்கு முன் நிலுவையில் இருந்தன.

- 2024 ஆம் ஆண்டில், அந்த ஆணையங்கள் 1.73 லட்சம் புதிய வழக்குகளைப் பெற்றாலும், அவற்றில் 1.58 லட்சம் மட்டுமே தீர்க்கப்பட்டன என்ற நிலையில், இது சுமார் 14,900 வழக்குகளின் நிகர அதிகரிப்புக்கு வழி வகுத்தது.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை, 78,031 புதிய புகார்கள் பதிவு செய்யப்பட்டன, அதே சமயம் 65,537 வழக்குகள் தீர்க்கப்பட்டன.
- 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19 ஆம் தேதி நிலவரப்படி, மாநில நுகர்வோர் தகராறு தீர்வு ஆணையங்களில் 18 தலைவர் பதவிகளும் 62 உறுப்பினர் பதவிகளும் காலியாக இருந்தன.
- மாவட்ட அளவில், 218 தலைவர் பதவிகளும் 518 உறுப்பினர் பதவிகளும் காலியாக இருந்தன.




## 2025 ஆம் நிதியாண்டில் ஒரு லட்சம் காப்புரிமை தாக்கல்




- இந்தியாவின் காப்புரிமை விண்ணப்பங்கள் 2024-25 ஆம் நிதியாண்டில் முதல்

முறையாக 1 லட்சத்தைத் தாண்டின.

- நாட்டின் அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் 1.1 லட்சத்திற்கும் மேற்பட்ட காப்புரிமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்படுகின்றன.
- இது 2023-24 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட 92,168 காப்புரிமை விண்ணப்பங்களில் இருந்து, சுமார் 20% அதிகரிப்பினைக் குறிக்கிறது.
- இந்த தாக்கல்களில் உள்நாட்டு கண்டுபிடிப்பாளர்களின் பங்கு சுமார் 62% ஆகும்.
- காப்புரிமைகள், வடிவமைப்புகள், வர்த்தக முத்திரைகள் மற்றும் புவியியல் அடையாளங்கள் என அனைத்துப் பிரிவுகளிலும் வளமான வளர்ச்சியுடன் IPR தாக்கல்கள் 18 சதவீதத்திற்கும் அதிகமான வளர்ச்சியைக் கண்டன.

## பெட்ரோலில் 20 சதவிகிதம் எத்தனால் கலப்பு




- 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், இந்தியா பெட்ரோலில் 20% எத்தனால் கலப்பதற்கான இலக்கினை எட்டியது.
- எத்தனால் விநியோக ஆண்டு 2025-26 (2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம்) ஆம் ஆண்டின் இறுதியில் 20% என்ற ஒட்டு மொத்த எத்தனால் கலப்பிற்கான இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட உயிரி எரிபொருள்கள் மீதான தேசிய கொள்கை, 20% எத்தனால் கலப்பு இலக்கு ஆண்டினை 2030 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 2025-26 ஆம் ஆண்டாக மாற்றியது.
- பொதுத்துறை நிறுவன எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் 45.5 கோடி லிட்டர் எத்தனால் பெற்றன.

- 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் எத்தனால் கலப்பு விகிதம் 19.97% ஆக இருந்தது.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா-நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம்




- இந்தியா-நியூசிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (FTA) ஆனது இந்தியாவின் மிக வேகமாக நிறைவடைந்த FTA ஒப்பந்தங்களில் ஒன்றாகும்.
- கடந்த ஐந்து ஆண்டுகளில், சமீபத்தில் ஓமனுடன் கையெழுத்தானதுடன் சேர்த்து இந்தியா ஆறு FTA ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் கீழ், இந்தியா தனது பால்வளத் துறையை அனுமதிக்கவில்லை.
- பால் இறக்குமதிகள் எதுவும் அனுமதிக்கப்படவில்லை என்ற நிலையில், மேலும் பால் பொருட்களுக்கு வரிச் சலுகைகள் எதுவும் வழங்கப்படவில்லை.
- நியூசிலாந்து நிறுவனங்கள் பால் மூலப்பொருட்களை, பதப்படுத்துவதற்கும் 100% மறு ஏற்றுமதிக்கும் மட்டுமே இந்தியாவிற்கு கொண்டு வர முடியும்.
- இந்தியாவில் பதப்படுத்தப்பட்டத் தயாரிப்புச் செயல்முறைக்கு உள்ளான பால் பொருட்களை இந்தியச் சந்தையில் விற்க முடியாது.
- இந்தியா எந்த FTA ஒப்பந்தத்தின் கீழும் தனது பால்வளத் துறையை ஒருபோதும் அனுமதித்ததே இல்லை.

## அக்ரா உடன்படிக்கை 2025

- பேச்சுவார்த்தைக்குட்பட்ட சரக்கு ஆவணங்கள் மீதான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை 2025 ஆம் ஆண்டு டிசம்பர் 15 ஆம் தேதியன்று ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இது பேச்சுவார்த்தைக்குட்பட்ட சரக்கு ஆவணங்கள் மீதான அக்ரா உடன்படிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.
- இந்த உடன்படிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வர்த்தக சட்ட ஆணையத்தின் (UNCITRAL) கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- இது சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் பேச்சுவார்த்தைக்குட்பட்ட சரக்கு ஆவணங்களுக்கான சட்ட விதிகளை உருவாக்குகிறது.
- அந்த ஆவணங்களாவன காகிதம் அல்லது மின்னணு வடிவத்தில் இருக்கலாம் மற்றும்

போக்குவரத்தில் உள்ள பொருட்களை குறிப்பதாக இருக்கலாம்.

- இந்த உடன்படிக்கை டிஜிட்டல் வர்த்தகம் மற்றும் பலதரப்பட்டப் போக்குவரத்தை ஆதரிக்கிறது.




## UNCAC மாநாடு




- 11வது பங்குதாரர்கள் மாநாடானது (COSP11) கத்தாரின் தோஹாவில் நடைபெற்றது.
- ஊழலைத் தடுக்கவும் அதனை எதிர்த்துப் போராடவும் உலகளாவிய ஒத்துழைப்பை வலுப்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும்.
- ஐக்கிய நாடுகள் சபையின் ஊழலுக்கு எதிரான உடன்படிக்கையின் (UNCAC) முன்னுரிமைகளைச் செயல்படுத்துவதற்கான பல தீர்மானங்கள் மற்றும் கொள்கை முடிவுகளைப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர்.
- சுற்றுச்சூழல் குற்றங்கள் தொடர்பான ஊழலைத் தடுப்பது குறித்த தீர்மானமும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- அரசாங்கங்களும் பங்குதார அமைப்புகளும் இந்த முடிவுகளைச் செயல்படுத்துதல் மற்றும் அதன் பின்னான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## புளுபேர்ட் பிளாக்-2 கலம்


- இஸ்ரோ நிறுவனம், LVM3 ஏவு வாகனத்தினைப் (GSLV-MK III) பயன்படுத்தி ப்ளுபேர்ட் பிளாக்-2 என்ற ஒரு புதிய முக்கியத்துவம் வாய்ந்த கலத்தினை புவி தாழ்மட்டச் சுற்றுப்

பாதையில் (LEO) நிலை நிறுத்துவதற்காக விண்ணில் ஏவியது.

- இது அமெரிக்காவின் AST ஸ்பேஸ்மொபைல் நிறுவனத்தின் 6,100 கிலோகிராம் எடை உள்ள மிகப்பெரிய தகவல் தொடர்பு செயற்கைக் கோளைச் சுமந்து செல்கிறது.
- இந்த ஏவுதல் என்பது அதன் அளவை முன்னிலைப்படுத்தும் விதமாக 'பாகுபலி' என்று பிரபலமாக விவரிக்கப்படுகிறது.
- இது இந்தியாவிலிருந்து ஏவப்பட்ட, AST ஸ்பேஸ்மொபைல் இன்க் நிறுவனத்தின் இது வரை இல்லாத மிகப்பெரிய செயற்கைக்கோள் ஆகும்.
- எலோன் மஸ்க்கின் ஸ்டார்லிங் நிறுவனத்திற்கு எதிராகப் போட்டியிட நிறுவனத்திற்கு உதவும் தொடர்ச்சியான நிலை நிறுத்தல்களில் இது முதன்மையானது ஆகும்.
- முந்தைய மிகப்பெரிய செயற்கைக் கோள் ஆனது, புவி ஒத்திசைவுப் பாதை மாற்றச் சுற்றுப் பாதையில் (GTO) இஸ்ரோவால் ஏவப்பட்ட LVM3-M5 தகவல் தொடர்பு செயற்கைக் கோள் 03 ஆகும்.




## குழந்தைகளுக்கான வாய்வழியாகச் செலுத்தும் இரும்புச்சத்து சிகிச்சை




- இரும்புச்சத்து குறைபாடுள்ள 10 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குப்

பரிந்துரைக்கப்பட்ட அக்ரூஃபர் எனும் வாய்வழி மருந்தினை அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு தற்போது அங்கீகரித்துள்ளது.

- இது அன்றாட வாழ்க்கையில் சிறப்பாக பொருந்தக்கூடிய ஒரு புதிய, உடலில் ஊடுருவாத வகையிலான சிகிச்சை விருப்பத் தேர்வினை வழங்குகிறது.
- இரும்புச்சத்து குறைபாடு ஆனது இரத்த சோகைக்கு மிகவும் பொதுவான காரணம் ஆகும்.
- இது தொடர்ச்சியான சோர்வு, கவனம் குறைதல், தாமதமான வளர்ச்சி மற்றும் மோசமான கல்வி செயல்திறன் ஆகியவற்றை ஏற்படுத்தும்.
- அக்ரூஃபர் 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரையில் பெரியவர்களுக்கு மட்டுமே அங்கீகரிக்கப் பட்டது.


## கோஸ்ட்பேரிங் எச்சரிக்கை




- இந்தியக் கணினி அவசரகால நடவடிக்கைக் குழு (CERT-In) வாட்ஸ்அப் பயனர்களை குறி வைத்து செயல்படும் ஒரு அச்சுறுத்தல் பிரச்சாரம் குறித்து ஓர் எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்தத் தாக்குதல் ஆனது, வாட்ஸ்அப் கணக்குகளை முடக்க தீங்கிழைக்கும் காரணிகளைப் பயன்படுத்துகின்ற கோஸ்ட்பேரிங் என்ற புதிய நுட்பத்தைப் பயன்படுத்துகிறது.
- தீங்கிழைக்கும் காரணிகள் வாட்ஸ்அப் கணக்குகளை அங்கீகாரம் இல்லாமல் கையகப் படுத்தி, பாதிக்கப்பட்டவர்களை இணைத்தலுக்கான குறியீடுகளை உள்ளிட செய்கிறது.

- இது இணைய வெளிக் குற்றவாளிகள் கடவுச்சொற்கள் அல்லது SIM பரிமாற்றங்கள் என அதனுடைய தேவையுமில்லாமல் வாட்ஸ்அப் கணக்குகளை முழுமையாகக் கட்டுப்படுத்த அனுமதிக்கிறது.

## புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையில் உள்ள விண்வெளிக் குப்பைகள்





- சிறிய விண்கற்கள் மற்றும் சுற்றுப்பாதை குப்பைகள் (MMOD) என்பது பூமியைச் சுற்றி மிக அதிக வேகத்தில் நகரும் சிறிய இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட பொருள்கள் ஆகும்.
- சிறிய விண்கற்கள் சிறுகோள்கள் மற்றும் வால்நட்சத்திரங்களிலிருந்து வருகின்றன, அதே நேரத்தில் சுற்றுப்பாதை குப்பைகள் உடைந்த செயற்கைக்கோள்கள் மற்றும் ஏவு கலத்தின் பாகங்களிலிருந்து வருகின்றன.
- பெரும்பாலான சுற்றுப்பாதைக் குப்பைகள் 200 கிமீ முதல் 2,000 கிமீ உயரத்திற்கு இடையில் உள்ள புவி தாழ் மட்டச் சுற்றுப்பாதையில் காணப்படுகின்றன.
- மிகச் சிறிய MMOD துகள்கள் கூட அதிவேகத்தின் காரணமாக செயற்கைக்கோள்கள் மற்றும் விண்கலங்களைச் சேதப்படுத்தும்.
- இந்தக் குப்பைகளுக்கு இடையிலான மோதல்கள் கெஸ்லர் பாதிப்பு எனப்படும் அதிகக் குப்பைகளை உருவாக்கக் கூடும்.
- MMOD விண்வெளி வீரர்கள், விண்வெளி நிலையங்கள் மற்றும் எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்கு கடுமையான ஆபத்தை ஏற்படுத்துகிறது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஐரோப்பாவில் ரக்கூன் வட்டப்புழு


- பொதுவாக ரக்கூன் வட்டப்புழு என்று அழைக்கப்படும் பேலிசாஸ்காரிஸ் புரோசியோனிஸின் அதிகரிப்பு ஆனது மிக அதிக தொற்று விகிதங்களுடன் ஐரோப்பா முழுவதும் காணப்படுகிறது.
- 1900 ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் வட அமெரிக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட ரக்கூன்களின் (அணிக்கரடிகள்) காரணமாக ஆரம்பத்தில் அங்கு பரவத் தொடங்கின.
- ரக்கூன்கள் ஆனது இதன் முதன்மை ஒம்புயிரிகளாக இருந்தாலும், அவை இந்த ஒட்டு உண்ணியின் ஒரே இலக்குகள் அல்ல.

- ரக்கூன் குடலில் உள்ள முதிர்வடைந்தப் புழுக்கள் தினமும் 1,80,000 முட்டைகள் வரை உற்பத்தி செய்கின்றன.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உயர்கல்வி குறித்த நிதி ஆயோக் அறிக்கை – 2025





- நிதி ஆயோக் அமைப்பானது, "உயர்கல்வியின் சர்வதேசமயமாக்கல்" என்ற தலைப்பிலான ஓர் அறிக்கையை வெளியிட்டது.
- வெளிநாடு செல்லும் இந்திய மாணவர்களுக்கும் இந்தியாவிற்கு வரும் வெளிநாட்டு மாணவர்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க 22 கொள்கைகளை

இந்த அறிக்கை பரிந்துரைக்கிறது.

- வெளிநாட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை ஈர்க்க விஸ்வ பந்து உதவித் தொகை மற்றும் புத்தாய்வு மாணவர் ஆதரவு ஆகியவற்றினை இது முன்மொழிகிறது.
- இந்த அறிக்கை ஈராஸ்மஸ் பிளஸ் போன்ற கல்வி இயக்கம் திட்டத்தைப் பரிந்துரை செய்கிறது (ஈராஸ்மஸ் பிளஸ் என்பது ஓர் ஐரோப்பிய ஒன்றிய மாணவர் பரிமாற்றத் திட்டம்).
- பாரத் வித்யா கோஷ் எனப்படும் சுமார் 10 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான ஆராய்ச்சி நிதியை இது பரிந்துரைக்கிறது.
- இந்தச் செயல் திட்டம் "வளாகத்திற்குள் வளாகம்" என்ற மாதிரியின் கீழ் இந்தியாவில் உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழக வளாகங்களை ஆதரிக்கிறது.

# மாநிலச் செய்திகள்

## பா பா பக்லி திட்டம்




- குஜராத்தின் தஹோத் மாவட்டத்தில் பா பா பக்லி திட்டம் செயல்படுத்தப்படுகிறது.
- இது மூன்று முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கான பள்ளிக் கல்விக்கு முந்தைய கற்றல் திட்டமாகும்.
- இந்தத் திட்டம் அங்கன்வாடி மையங்களில் மேற்கொள்ளப்படுகிறது.
- விளையாட்டு சார்ந்த செயல்பாடுகள் மற்றும் விளையாட்டு மற்றும் கற்றல் முறைகள் மூலம் குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படுகிறது.
- இது ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் நிதியம் (UNICEF) - இந்தியா அமைப்பினால் ஆதரிக்கப் படுகிறது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## PRSI தேசிய விருதுகள்

- இந்திய எஃகு ஆணைய நிறுவனமானது (ஸ்டீல் அத்தாரிட்டி ஆஃப் இந்தியா லிமிடெட்-SAIL) இந்திய மக்கள் தொடர்பு சங்கத்திலிருந்து (PRSI) எட்டு தேசிய விருதுகளை வென்றது.
- டேராடூனில் நடைபெற்ற 47வது அகில இந்திய மக்கள் தொடர்பு மாநாட்டில் இந்த

விருதுகள் வழங்கப்பட்டன.

- விளம்பரம், மக்கள் தொடர்பு, டிஜிட்டல் தொடர்பு மற்றும் நிகழ்வு மேலாண்மை ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்காக வேண்டி SAIL நிறுவனத்திற்கு விருது வழங்கி அங்கீகரிக்கப் பட்டது.
- செயற்கை நுண்ணறிவினைப் பயன்படுத்தி சிறப்பான விளம்பரப் பிரச்சாரம் மற்றும் மக்கள் தொடர்புகளில் செயற்கை நுண்ணறிவின் சிறப்பானப் பயன்பாடு ஆகியவை இந்த நிறுவனம் பெற்ற விருதுகளில் அடங்கும்.



# முக்கிய தினங்கள்

## தேசிய நுகர்வோர் தினம் 2025 - டிசம்பர் 24




- இந்த நாள் 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவர்

ஒப்புதல் அளித்ததை நினைவு கூரும் வகையில் அனுசரிக்கப்படுகிறது.

- இந்தச் சட்டம் 6 அடிப்படை நுகர்வோர் உரிமைகள் மற்றும் ஒவ்வொரு நுகர்வோரும் பின்பற்ற வேண்டிய ஐந்து பொறுப்புகளை பட்டியலிடுகிறது.
- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1991, 1993 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் மூன்று முறை புதுப்பிக்கப்பட்டது.
- பின்னர், 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், 1986 ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மாற்றியமைத்து, நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2019 என்று கொண்டு வரப் பட்டது.
- 2025 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Efficient and Speedy Disposal through Digital Justice" என்பதாகும்.

# இதரச் செய்திகள்

## இந்தியாவின் மிகப்பெரிய வட்டக் கல் – லாபிரிந்த்




- மகாராஷ்டிராவின் சோலாப்பூர் மாவட்டத்தின் போராமணி புல்வெளிகளில் லாபிரிந்த் என்ற பெரிய வட்டக் கல் அமைப்பு கண்டுபிடிக்கப்பட்டது.
- இது தோராயமாக 50 அடிக்கு 50 அடி என்ற அளவு கொண்டது என்பதோடு மேலும் இது அசாதாரணமான 15 குவிந்த சுற்றுகளைக் கொண்டுள்ளது.
- கிட்டத்தட்ட சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முந்தைய இந்த அமைப்பு சாதவாகன வம்ச காலத்தில் இந்தோ-ரோமானிய வர்த்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் முன்னர் பதிவு செய்யப்பட்ட பெரும்பாலான லாபிரிந்த்கள் (சுருள் புழைகள்) அதிகபட்சமாக 11 சுற்றுகளைக் கொண்டிருந்தன.
- 15 சுற்றுகளைக் கொண்ட இந்தப் புதிய கண்டுபிடிப்பு இந்தியாவின் மிகப்பெரிய வட்ட வடிவ லாபிரிந்த் ஆக அமைகிறது.

- சாங்லி, சதாரா மற்றும் கோலாப்பூர் போன்ற மாவட்டங்களிலிருந்து இதே போன்ற ஆனால் சிறிய லாபிரிந்த்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- ரோமானிய வணிகர்கள் மற்றும் மசாலாப் பொருட்கள், ஜவுளி மற்றும் விலை மதிப்பு அற்ற கற்கள் போன்ற பொருட்களை வணிகம் செய்யும் உள்ளூர் வணிகர்களுக்கு லாபிரிந்த்கள் வழி செலுத்தலுக்கான குறிப்பான்களாகவோ அல்லது குறியீட்டு அடையாளங்களாகவோ செயல்பட்டிருக்கலாம்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★